செயற்பொறியாளர்,பொபது., கட்டிட (க&ப) கோட்டம், விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.அ.கணேசன்,பி.இ.,எம்.டெக்.,
செயற்பொறியாளர்,பொ.ப.து.,

**செயல்முறை ஆணை எண்: இ2/66/ 2021/நப1வரு/நாள்:26.01.2021**

பொருள்: நியமனம் (நேரடி) பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி -செல்வி.க.இந்துபிரியா, இளநிலை உதவியாளர்- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வு தொகுதி-4 அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது - மறுபணியமர்வு ஆணை- பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.191 பொதுத்துறை நாள்.01.02.1962
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை -3 அவர்களின் கடித எண்.2496/PSD-I/2020/ நாள்.29.05.2020.
3. முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ். 3(3)/35935/2020/நாள்:17.09.2020.
4. இக்கோட்டசெ.மு.ஆ.எண்.இ2/55(997)/2020/நப5ஆ/ நாள்.21.09.2020

*****

பார்வை 3ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி-IVல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடியாக தேர்வு செய்யப்பட்டு, பணி நியமன ஒதுக்கீடு ஆணை மற்றும் மறுபணியமர்வு ஆணை பெற்று, இக்கோட்ட அலுவலகத்தில் செல்வி.க.இந்துபிரியா,இளநிலை உதவியாளராக 21.09.2020 பிற்பகல் பணியேற்பு செய்துள்ளார்.

மேற்காணும், இளநிலைஉதவியாளருக்கு தமிழ்நாடு அரசு மாநில மற்றும் பணிவிதிகள் 23(A)ன் கீழ் அன்னார் பணியேற்பு செய்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதி மன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள்- தொகுதி-IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

மேலும், அன்னார் மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.அன்னார் தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் மாவட்ட நடைமுறைநூல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப) கோட்டம்,
விருதுநகர்.

20.1.2021

20/1/21

பெறுநர்:
செல்வி.க.இந்துபிரியா,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்,
விருதுநகர்.

4/5